# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No. 526/2024

Deposition of Witness for P.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சித்ரா | Caste | : | |
| Husband's Name | : | நாச்சிமுத்து | Occupation | : | கூலி வேலை |
| Village | : | அம்பேத்கர் நகர் | Religion | : | |
| Taluk | : | ஈரோடு | Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.07.**2025**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**(எதிரி ஆஜரில் இல்லை. BNSS பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**<u>முதல் விசாரணை</u>:**

நான் தற்போது ஈரோடு அம்பேத்கர் நகரில் வசித்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 02.07.2019 அன்று காலை எனது கணவர் நாச்சிமுத்து எப்போதும் போல் வேலைக்கு சென்றார். அன்றைய தினம் சுமார் 12.00 மணி அளவில் நான் வீட்டில் இருந்த போது எனது கணவருக்கு வீரப்பன்சத்திரத்தில் இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தபோது, எனது கணவர் ஓட்டிவந்த வாகனத்தின் மீது டிப்பர் லாரி மோதி விபத்து எற்பட்டுவிட்டதாக எனது கணவர் பணிபுரியும் மதுரா Rice Mill-ன் உரிமையாளர் என்னிடம் போனில் தகவல் தெரிவித்தார். உடனே நான் எனது உறவினர்களை அழைத்துக்கொண்டு ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். அப்போது எனது கணவர் இறந்துவிட்டதாக மருத்துவர் தெரிவித்தாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். எனது கணவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யவேண்டும் என்று சொன்னார்கள். ஆகவே, நான் உடன் இருந்து எனது கணவரின் பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். பின்னிட்டு நான் வடக்கு காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் அளித்தது தான். அதில்

உள்ள கையொப்பம் என்னுடையதான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**:

எனது வீடு உள்ள K.G வலசில் இருந்து, ஈரோடு அரசு மருத்துவமனைக்கு பேருந்தில் வந்தால் சுமார் 45 நிமிடங்கள் ஆகும் என்றால், சரிதான். விபத்து சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது, எனது கணவர் பணிபுரியும் நிறுவனத்தின் உரிமையாளர் போனில் தகவல் தெரிவித்ததன் பேரில் தான் தெரியும் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் எழுதியது அல்ல என்றால், சரிதான், நான் சொல்லச்சொல்ல போலீசார் எழுதினார்கள். புகாரில் தேதி குறிப்பிட்டு எழுதவில்லை என்றால், சரிதான். புகார் நான் சொல்லியுள்ள விபரங்கள் யார் என்னிடம் தெரிவித்தது என்றால், விபத்து சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி என்னிடம் தெரிவித்தார். எனது கணவர் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தை சரிவர ஓட்டாமல் வேறு வகையில் எனது கணவருக்கு ஏற்பட்ட காயத்தை சரியாக நான் தெரிந்துக்கொள்ளாமல் இந்த விபத்தில் ஏற்பட்டதாக கூறி பொய் புகார் அளித்துள்ளேன் என்றால், சரியல்ல.

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the dependent to be correct.

J.M. A.M.C.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No. 526/2024

Deposition of Witness for P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நந்தக்குமார் | Caste | : | |
| Father's Name | : | நாச்சிமுத்து | Occupation | : | Mechanic |
| Village | : | அம்பேத்கர் நகர் | Religion | : | |
| Taluk | : | ஈரோடு | Age | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.07.2025**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**(எதிரி ஆஜரில் இல்லை. BNSS பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஈரோடு அம்பேத்கர் நகரில் வசித்து கொண்டு, Mechanic ஆக வேலை செய்து வருகிறேன். கடந்த 02.07.2019 அன்று நான் வேலையில் இருந்தபோது மதியம் சுமார் 01.00 மணி அளவில் எனது அம்மா எனக்கு போன் செய்து எனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக என்னிடம் தெரிவித்தார். நான் எனது பெரியப்பாவிற்கு போன் செய்து தகவல் தெரிவிப்பதாக எனது அம்மாவிடம் சொன்னேன். நான் எனது பெரியப்பாவிற்கு போன் செய்து எனது அப்பாவிற்கு எற்பட்ட விபத்து பற்றிய தகவல் தெரிவித்தேன். எனது பெரியப்பா சம்பவ இடம் சென்று பார்த்துவிட்டு எனது அப்பாவை ஆம்புலன்ஸ்-ல் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டார்கள் என்று சொன்னார். பின்னிட்டு அவர்கள் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது எனது அப்பா மருத்துவமனைக்கு அழைத்துசெல்லும் வழியிலேயே இறந்துவிட்டார் என்று சொன்னார். நான் வேலையில் இருந்து வீட்டிற்கு வந்து என் அம்மாவை அழைத்துக்கொண்டு ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். அங்கிருந்த விபத்தை நேரில் பார்த்த ஆறுமுகம் என்பவரை விசாரித்தபோது, அவர் எனது அப்பா வீரப்பன்சத்திரம் Suzuki Showroom முன்பாக மேற்கில் இருந்த கிழக்காக இருசக்கர

வாகனத்தில் வந்துக்கொண்டிருந்தபோது மினி டிப்பர் லாரி வந்து பின்னால் மோதி விபத்து ஏற்படுத்தியதாக என்னிடம் சொன்னார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

இதற்கு முன்னர் சாட்சியம் அளித்து சென்று அ.சா.1 எனது தாயார் மற்றும் ப.சா.4 ரவி எனது பெரியப்பா என்றால், சரிதான். இந்த விபத்து சம்பவம் குறித்து எனது தாயார் எனக்கு தகவல் சொல்லிதான் தெரியும் என்றால், சரிதான். அரசு மருத்துவமனையில் எனது தந்தையின் பிரேதத்தை அடையாளம் காட்டச்சொன்னபோது போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால், சரிதான். இந்த விபத்தில் எனது அப்பா இறந்துபோனதற்காக இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான்.

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the dopondent to be correct.

J.M. A.M.C.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No. 526/2024

Deposition of Witness for P.W.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரவி | Caste | : | |
| Father's Name | : | பழனி | Occupation | : | விவசாயம் |
| Village | : | 46 புதூர் | Religion | : | |
| Taluk | : | ஈரோடு | Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.07.2025**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**(எதிரி ஆஜரில் இல்லை. BNSS பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**<u>முதல் விசாரணை</u>:**

நான் தற்போது ஈரோடு 46 புதூரில் வசித்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.2 என்னுடைய மனைவியின் சகோதரியின் மகன் ஆவார். கடந்த 02.09.2019 காலை 11.00-11.30 மணி அளவில் நான் காட்டில் வேலை செய்துக்கொண்டிருந்தபோது அ.சா.2 நந்தக்குமார் எனக்கு போன் செய்து அவருடைய அப்பாவிற்கு வீரப்பன்சத்திரம் 4 ல் ரோட்டில் அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக என்னிடம் போனில் தகவல் தெரிவித்தார். நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். பார்த்தபோது அங்கு ஆறுமுகம் என்பவர் நின்றுக்கொண்டிருந்தார். அவர் 108 ஆம்புலன்ஸ்-ல் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு நாச்சிமுத்துவை அழைத்துச்செல்வதாக தகவல் சொன்னார். நானும், உடனே ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு சென்று பார்த்தபோது நாச்சிமுத்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டதாக ஆம்புலன்ஸ்-ல் இருந்தவர்கள் சொன்னார்கள். பின்னிட்டு பிரேத பரிசோதனை நடத்துவதற்காக நாச்சிமுத்துவின் பிரேதத்தை பிணவறைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். நான் பின்னிட்டு காவல் நிலையம் சென்று வழக்கு சம்மந்தமாக புகார்

அளிப்பதற்கு துணையாக இருந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாத்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**:

அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது உறவினர்கள் என்றால், சரிதான். மேற்படி விபத்து சம்பவம் குறித்து அ.சா.2 நந்தக்குமார் போனில் தெரிவித்த தகவல் மூலமாக தான் எனக்கு தெரியும் என்றால், சரிதான். இந்த வழக்கில் இறந்துபோன நாச்சிமுத்து எனது உறவினர் என்பதால், அ.சா.1 மற்றும் அ.சா.2 கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the dependent to be correct.

J.M. A.M.C.